கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரை ஆற்றி பொங்கல் பரிசினை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கிழக்கு மாவட்டச் செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், முன்னாள் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலைநாகராஜ், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சந்திரன், சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பரிதா நவாப், செந்தில், கிருபாகரன், பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம்,பாலன், நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அமைச்சர் அர.சக்கரபாணி சிறப்புரை!

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமை!

கிருஷ்ணகிரி, ஜன. 10 - கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் BLA 2, BLC ஆகியோருக்கான ஆலோசனைக் கூட்டம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமையில் கிருஷ்ணகிரியில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகி கள், அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முதல்வர்கள் BLA 2, BLC உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் தமிழக உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சரும், கிருஷ்ணகிரி மாவட்டப் பொறுப்பு அமைச்சருமான அர.சக்கரபாணி கலந்து கொண்டு பேசும் போது, கழக அனைத்து நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள் கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆலோசனைப்படி கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து அணிகளின் நிர்வாகிகள் அவர்கள் சார்ந்த பகுதிகளில் கழகப் பணிகள் சிறப்பாக பணியாற்ற வேண்டும். கழக தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின்படி தமிழ்நாடு முழுவதும் வருகிற 2026 ஆம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் 200 க்கும் மேற்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆணையின்படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி, பர்கூர், ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதிகள் வெற்றி பெறுவதற்காக பொதுமக்களை சந்தித்து திராவிட மாடல் ஆட்சியில் செயலாற்றி வரும் மக்கள் நலத் திட்டங்களை எடுத்துக் கூறி தீவிரமாக பணியாற்ற வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் அமைச்சர் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளுக்காக பரிசுகளை வழங்கினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மணிமேகலைநாகராஜ், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சந்திரன், சாவித்திகடலரசு மூர்த்தி, பொருளாளர் கதிரவன் ,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பரிதா நவாப், செந்தில் , கிருபாகரன் , பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம்,பாலன், நாகராசன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன்,கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் திருப்பத்தூர் தேவகுமார், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சேலம் ரமேஷ், கிருஷ்ண கிரி நகரக் கழக செயலாளர் நவாப், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன் , தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சாந்தமூர்த்தி, ராஜேந்திரன், அறிஞர் , நரசிம்மன் , குண.வசந்தரசு, எக்கூர் செல்வம், ரஜினி செல்வம், குமரேசன்,

பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை, வெங்கடப்பன், பேரூர் கழக பொறுப்பாளர் பார்த்திபன் ,சாஜித் , ஊத்தங்கரை பேரூராட்சி தலைவர் அமானுல்லா ,

கழகப் பிரமுகர் அன்பரசன் உள்ளிட்ட மாவட்ட ஒன்றிய நகர பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள் ,துணை தலைவர்கள் ,துணை அமைப்பாளர்கள், இந்நாள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் , BLA 2 நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்டம் பாலக்கோடு மத்திய ஒன்றிய கழக செயலாளர் முனியப்பன் ஏற்பாட்டில் பொதுமக்கள் 500 நபர்களுக்கு வேட்டி சேலைகளை மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் வழங்கினார். உடன் மாவட்ட பொருளாளர் முருகன், ஒன்றிய செயலாளர் எம்வீடி.கோபால், அரசு வழக்கறிஞர் பி.கே.முருகன், ஒன்றிய அவைத்தலைவர் ராஜாமணி, ஒன்றிய துணை செயலாளர்கள் பி.எல்.ஆர்.ரவி, அற்புதம்செந்தில், ஒன்றிய பொருளாளர் குமார் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

தமிழக ஆளுநரைக் கண்டித்து

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம்!

டி.செங்குட்டுவன் – இ.ஜி.சுகவனம் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, ஜன. 10 - தமிழக ஆளுநர் ரவி சட்டமன்ற கூட்டத்தொடர் துவக்க நாள் உரையை புறக்கணித்து சட்டமன்றத்தில் இருந்து வெளிநடப்பு செய்ததை கண்டித்தும், தொடர்ந்து தமிழக முன்னேற்றத்திற்கு தடையாக இருந்து வரும் தமிழக ஆளுநர் ரவியை கண்டித்தும், ஒன்றிய பாசிச பாஜக அரசை கண்டித்தும், இவர்களுக்கு துணை போய்க் கொண்டிருக்கும் அதிமுக வினரை கண்டித்தும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அண்ணா சிலை முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கவர்னரை வெளியேறும்படி கண்டனம் முழக் கங்களை எழுப்பினார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி.செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் இ.ஜி.சுகவனம், மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மருத்துவர் மாலதிநாராயணசாமி, மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி,சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பரிதா நவாப் , செந்தில், கிருபாகரன் பொதுக்குழு உறுப்பினர்கள் அஸ்லாம், பாலன், நாகராசன், கோதண்டன், சித்ரா சந்திரசேகர் , கிருஷ்ணகிரி நகர கழக செயலாளர் நவாப், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சாந்தமூர்த்தி, அறிஞர், ராஜேந்திரன், நரசிம்மன், குணவசந்தரசு, எக்கூர் செல்வம், ரஜினி செல்வம், குமரேசன், பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை ,வெங்கடப்பன், பேரூர் கழக பொறுப்பாளர்கள் பார்த்திபன், சாஜித் மற்றும் மாவட்ட ஒன்றிய நகர பேரூர் அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கழகமூத்த முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு ஆளுநருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்கள்.

நிவேதா முருகன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் - மயிலாடுதுறையில்

தமிழ்த்தாய் வாழ்த்தை அவமதித்த ஆளுநரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

குண்டாமணி (எ) என்.செல்வராஜ் தலைமையில் – குத்தாலம் கல்யாணம் கண்டன உரை!

மயிலாடுதுறை, ஜன. 10 - தமிழ்நாட்டையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப் படுத்தி வரும் ஆளுநரைக் கண்டித்து மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் ஏற்பாட்டில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆளுநரை பாப்பாற்றும் அ.தி.மு.க., பா.ஜ.க. கள்ளக் கூட்டணிக்கும் ஆர்ப்பாட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தும் ஆளுநரைக் கண்டித்து 7.1.2025 அன்று காலை தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தலைமைக் கழகம் சார்பில் அறிவிக்கப்பட்டது. அதன்படி 7.1.2025 அன்று காலை 10.30 மணிக்கு மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மயிலாடுதுறை கிட்டப்பா அங்காடி அருகே தபால்நிலையம் முன் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கழகத்தினர்ஆளுநர் பதவி விலக வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர்.

ஆர்ப்பாட்டத்தில் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், கழக கொள்கை பரப்புச் செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம.இளங்கோவன், முத்து.மகேந்திரன், ஜி.என். ரவி, மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி. சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞான வேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் என்.இளையபெருமாள், மங்கை எம்.சங்கர், மூவலூர் எம்.மூர்த்தி, ஞான.இமையநாதன், எம்.அப்துல்மாலிக், பி.எம்.அன்பழகன், ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், பஞ்சு.குமார், செல்லசேது.ரவிக்குமார், மலர்விழிதிருமாவளவன், ப.முருகமணி, கு.வைத்யநாதன், ஏ.ஆர். ராஜா, அமிர்த.விஜய குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், நத்தம் வின்சென்ட், ஜெ.கபிலன், கென்னடி, அ.காந்தி, எஸ்.சங்கரநாராயன், வைத்தீஸ்வரன்கோயில் எஸ்.சுவாமிநாதன், அரசு வழகறிஞர் இரா.சோயேன், பேரூர் செயலாளர்கள் முத்துராஜா, எம்.அன்புச்செழியன், எம்.சம்சுதீன், அண்ணாதுரை மற்றும் மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கிளை, வார்டு நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது நன்றி கூறினார்.

தமிழ்நாட்டை அவமானப் படுத்திவரும் ஆளுநர் ரவியைக் கண்டித்து

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க .சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

டாக்டர் மாசிலாமணி – சேதுநாதன் – சீத்தாபதி சொக்கலிங்கம் பங்கேற்பு!

திண்டிவனம், ஜன. 10 - தமிழ்நாட்டையும் தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தி வரும் தமிழக ஆளுநர் ஆர்.என். ரவியை கண்டித்தும், ஒன்றிய அரசின் மீது உள்ள தமிழ்நாட்டு மக்களின் கோபத்தை திசை மாற்றவும் வித்தைகளைச் செய்யும் அதிமுக பாஜக கள்ளக் கூட்டணியை கண்டித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் திண்டிவனத்தில் உள்ள காந்திசிலைஅருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில்ஆயிரக்கணக்கான திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டு தமிழக ஆளுநர் ஆர்.என். ரவியையும், ஒன்றிய பாஜக அரசை கண்டித்து கண்டன கோஷமிட்டனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ்செல்வன், தலைமை தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட பொருளாளர் ரமணன், துணை செயலாளர்கள் மரக்காணம் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார், அருணகிரி, செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார்,சீனி சின்ன ராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வராஜ்,மணிவண்ணன்,பாலகிருஷ்ணன், கதிரேசன், சாந்தி ஏழுமலை ஒன்றிய செயலாளர்கள் சொக்கலிங்கம், ராஜாராமன், அண்ணாதுரை, தயாளன்,பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன், துரை,

இளம்வழுதி, நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிர மணியன், விஜயராகவன், பச்சையப்பன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன்,பேரூர் கழக செயலாளர்கள் கார்த்திக், சம்பத், திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன்,செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், முன்னாள் மாவட்ட துணை செயலாளர் அசோகன், நகர அவைத்தலைவர் ரவிச்சந்திரன், மாவட்ட அணி அமைப்பாளர்கள் இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த், வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் கோபிநாத்,சிறுபான்மை பிரிவு அணி அமைப்பாளர் அன்சாரி,கலை இலக்கிய அணி அமைப்பாளர் செந்தில்குமார், அண்ணாதுரை,செந்தில், சந்திரன், திருமலை, திலகவதி, சிவகாமி,

டாக்டர் அசோக்குமார், ராஜா, ரோமியன், காதர் நவாஸ். ரமேஷ், எம்.டி. பாபு,ஜ விஜயக்குமார், அண்ணாமலை,உதயகுமார்,வழக்கறிஞர் ஆதித்தன், சின்னதுரை, ஆறுமுகம், டேவிட், வழக்கறிஞர் புஷ்பா, வழக்கறிஞர் ராம கிருஷ்ணன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

திருப்பதியில் கூட்ட நெரிசலில் சிக்கி

உயிரிழந்த குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்!

காயமடைந்தவர்கள் விரைந்து நலம்பெற முதல்வர் மு.க.ஸ்டாலின் விழைவு!

சென்னை, ஜன. 10-

திருப்பதியில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் காயமடைந்தவர்கள் விரைந்து நலம் பெற வேண்டியும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளத்தில் பதிவிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலை தளப்பதிவு வருமாறு:-

திருப்பதியில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் உள்ளிட்ட அப்பாவி உயிர்கள் பலியாகியுள்ள துயர நிகழ்வை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

இந்தச் சோகச் சம்பவத்தில் உற்றாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைந்து நலம்பெற விழைகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதியார் அவர்களின் ஆணைப்படி தமிழ்நாட்டையும், தமிழ்த்தாய் வாழ்த்தையும் தொடர்ந்து அவமானப்படுத்தி வரும் தமிழ்நாடு ஆளுநரைக் கண்டித்தும், அ.தி.மு.க., பா.ஜ.க. கள்ளக் கூட்டணியைக் கண்டித்தும் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக ஓசூர் ராம் நகரில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட அவைத்தலைவர் யுவராஜ் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது இக்கூட்டத்தில் மாநகர மேயர் எஸ்.ஏ.சத்யா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.முருகன், மாநகர துணை மேயர் ஆனந்தய்யா, மாவட்ட துணை செயலாளர்கள் சின்னசாமி, புஷ்பா சர்வேஷ், பொருளாளர் சுகுமாரன், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வீரா ரெட்டி , எல்லோரா மணி, கிரிஷ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜெயராமன், தனலட்சுமி, முனிராஜ், அப்துல் கலாம், கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், ஆளுநருக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

மாவட்டச் செயலாளர் பா.மு.முபாரக் பரிசுகள் வழங்கினார்!

குன்னூர் நகர தி.மு.க. சார்பில் சமத்துவப் பொங்கல் விழா!

நகரக் கழகச் செயலாளர் ராமசாமி தலைமையில்!

நீலகிரி, ஜன. 10 - நீலகிரி மாவட்டம், குன்னூர் நகர திமுக சார்பில் சமத்துவ பொங்கல் விழா நிகழ்ச்சி நகர கழக அலுவலக வளாகத்தில் குன்னூர் நகர செயலாளர் ராமசாமி தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட திமுக செயலாளர் பா.மு.முபாரக் கலந்துகொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி அனைவருக்கும் தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் குன்னூர் சிவசுப்ரமணிய சாமி திருக்கோவில் குருக்கள் மகேஸ்குமார், இமாம் ஜஹாங்கீர், அருட்தந்தை கிரிஸ்டோபர் சாம்ராஜ் மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணை செயலாளர் அன்வர்கான், மாநில விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வாசிம்ராஜா, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஸ்குமார், மேலூர் ஒன்றிய செயலாளர் லாரன்ஸ், கீழ்கோத்தகிரி ஒன்றிய செயலாளர் பீமன், உதகை தெற்கு ஒன்றிய செயலாளர் பரமசிவன், பொதுக்குழு உறுப்பினர்கள் கருப்பையா, சதக்கத்துல்லா, காளிதாசன், பேரூர் கழக செயலாளர்கள் ரமேஷ்குமார், மார்டின், சஞ்சீவ்குமார், குன்னூர் நகரமன்ற தலைவர் சுசிலா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சமத்துவ பொங்கல் நிகழ்ச்சியில் தமிழர் பாரம்பரிய விளையாட்டுகளான சிலம்பம், சட்டி உடைத்தல், பெண்களுக்கான போட்டிகள், கோல போட்டி போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பத்மநாபன், வினோத்குமார். குன்னூர் நகர நிர்வாகிகள் தாஸ், முருகேசன், சாந்தா, ஜெகநாத் ராவ், பழனிச்சாமி, மணிகண்டன், சார்லி, தலைமை கழக பேச்சாளர்கள் ஜாகீர்உசேன், நகரமன்ற உறுப்பினர்கள் மன்சூர், குமரேசன், ராபர்ட், வசந்தி, காவேரி, செல்வி, பாக்கியவதி, சமீனா, சித்ரா, மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஜெயகுமார். சிக்கந்தர், பிரபாவதி, ஜாகீர், அபிபூர் ரகுமான், மது, மகாலிங்கம், ஹரி, விஜி, பிருந்தா, ஆறுமுகம், விஜி, வினோத்குமார், குன்னூர் நகர இளைஞர் அணியினர் ரஹீம், சேகர், சோட்டு, ஜெயராம்ராஜா, விவேக், கார்திக், சுரேஷ், அபாஸ், ஜெய்பதி, சலீம் உட்பட கழக நிர்வாகிகள் ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் சாதனைகள் விளக்க பொதுக்கூட்டம் சேலம் கிழக்கு மாவட்டம் பெத்தநாயக்கன்பாளையம் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் ஒன்றிய செயலாளர் தங்க மருதமுத்து தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட அவைத் தலைவர் மு.ரா.கருணாநிதி ,மத்திய ஒன்றிய கழக செயலாளர் வி.எஸ். மூர்த்தி, வடக்கு ஒன்றிய கழக செயலாளர் தீ. சிவராமன், முத்துலிங்கம், சோமசுந்தரம் ,ஒன்றிய துணைச் செயலாளர் சீனிவாசன், ராமசாமி லோகேஸ்வரி , பேரூர் செயலாளர்கள் வெங்கடேஷ், பாபு, தலைமைக் கழக பேச்சாளர் காஞ்சி தமிழரசன்,மாவட்ட பிரதிநிதிகள் தனபால், , ராஜா, சுப்பிரமணி, மணிவண்ணன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.